1979 மார்ச் 3]

திரு. டி. கே. கபாலி : சலவையார்புரம் பகுதியில் டோபி கானா கட்டுவதற்கு கலைஞர் ஆட்சிக் காலத்தில் நிலம் ஒதுக்கப் பட்டது. தற்போது அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அங்கே மாநகராட்சி நிலம் இல்லை. ஆகவே, வேறு இடத்தில் நிலம் வாங்கி புதிதாகக் கட்ட வேண்டுமென்று ஆணையாளர் அரசுக்கு எழுதி அனுப்பி யிருக்கிறார். அரசு அதைத் பரிசீலித்து வருகிறது.

திரு. டி. கே. கபாலி : அங்கே வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான இடம் இருக்கிறது. அரசு அதை வாங்கி உடனடி யாக டோபிகானா கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அதுதான் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. அ. செல்வராசன் : வட சென்னையில் ராபின்சன் பூங்காவில் இருக்கும் டோபிகானா மோசமான நிலைமையில் இருக்கிறது. அதை உடனடியாகப் பழுது பார்க்க அரசு உத்தர விடுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அதை முதலில் அமைக்கும் செயற்குறிப்பு இருக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திசையன்விளை குடிநீர்த் திட்டம்.

* வினா எண் 207 —திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரம் தொகுதியில் உள்ள திசையன்விளை பேரூராட்சி பகுதிக்கு குடிநீர்த் திட்டம் ஏதேனும் ஆய்வு செய்யப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில் தற்போது அத்திட்டத்தின் நிலை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) இத்திட்டத்தின் ஆய்வுப் பணிகள் முடிவடைந்து அதற்கான உத்தேச மதிப்பீடு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது.